நாள்.24.04.2024

**அசல் வழக்கு எண். 9/2018**

**பி.வா.சா.1- வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

02.01.2018 ம் தேதியில் வாதிக்கு சொந்தமான தாவா சொத்தில் வடமேற்கு மூலையில் செப்டிக் டேங்க் கட்டுவதற்கான பள்ளம் தோண்டினேனா என்றால் ஏற்கெனவே இருந்த செப்டிக் டேங்க் சிறியதாக இருந்ததால் பெரிய செப்டிக் டேங்க் கட்டுவதற்காக பள்ளம் தோண்டினேன். நான் பள்ளம் தோண்டியதை வாதியின் மகன் தடுத்தாரா என்றால் அவர் வரவில்லை. வாதியின் மகன் என்னிடம் செப்டிக் டேங்க் கட்டுவதற்காக குழி தோண்டக்கூடாது என தடுத்தாரா என்றால் சரியல்ல. அதனால் தான் வாதி கடந்த 05.01.2018 ல் செப்டிக் டேங்க் கட்டுவதற்கு குழி தோண்டக்கூடாது என எனக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் வழக்கு தொடர்ந்த முறை சரியல்ல. 06.01.2018 ல் வழக்கு சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் வந்தார்களா என்றால் வந்தார்கள். அந்த சமயத்தில் நான் ஊரில் இல்லை. நான் சொல்வதுபோல் நீதிமன்ற ஆணையர் தாவா இடத்திற்கு வந்தபோது நான் ஊருக்கு சென்றுவிட்டதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்தஅறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிக்கையில் வடமேற்கு மூலையில் மேற்புற காம்பவுண்டு சுவற்றில் இருந்து 1.8 அடி துாரத்திலும், என் வீட்டின் தென்புறம் தாய் சுவற்றில் இருந்து 1.8 அடி, கிழமேல் 10.5 அடி, தென்வடல் 5.5 அடி அளவிற்கு 5 அடி ஆழத்திற்கு தொட்டி கட்ட பள்ளம் தோண்டியுள்ளார் என சொல்லியுள்ளரா என்றால் சரிதான். அந்த தொட்டியானது ஆணையர் பார்வையிட்ட நாளிற்கு 2 நாட்களுக்கு முன்பு தான் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். அந்த தொட்டிக்கு நேர் வடபுறம் எனது வீட்டின் வராண்டா அமைந்துள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட 06.01.2018 ம் தேதியில் எனது வராண்டாவில் இருந்து தொட்டி கட்டிய இடத்திற்கு செல்ல பாதை கிடையாது என குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. சாட்சி தற்பொழுது மீண்டும் பாதை உள்ளதாக சாட்சியம் அளிக்கிறார். அதுதான் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 என்றால் சரிதான். தாவா

சொத்தை நீதிமன்ற ஆணையர் நில அளவையருடன் அளக்க வேண்டுமென நான் ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு நிலுவையில் இருந்த நிலையில் அசல் வழக்கில் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கில் நான் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையில் நான்தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் மனுவில் எனது செல்வாக்கால் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. அந்த உத்தரவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.ம.சா.ஆ.3** ஆகும். நில அளவையர் தாக்கல் செய்த புல வரைபடம் **நீ.ம.சா.ஆ.4** ஆகும். மற்றும் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த புல வரைபடம் **நீ.ம.சா.ஆ.5** ஆகும். நீ.ம.சா.ஆ 3 அறிக்கையில் 06.01.2018 ல் தாவா சொத்தை பார்வையிட்டபோது செப்டிக் டேங்கிற்கு வடபுறம் உள்ள எனது தாய் சுவற்றில் இருந்து செப்டிக் டேங்க் செல்வதற்கு வழி ஒன்றும் இல்லாமல் இருந்தது, தற்பொழுது பார்க்கும்போது தென்புறம் தாய் சுவற்றில் ஒரு தகர கதவு போட்டு , பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளார். ஆனால் அது தவறு. எனது வீட்டின் தென்புறம் உள்ள தாய் சுவற்றிற்கும் தென்புறம் உள்ள தரிசு காலி மனை எவ்வளவு இடம் இருக்கும் என்றால் A,F,G,P,A ஆகிய இடத்திற்கு உண்டான மொத்த விஸ்திரணம் 4428 சதுர அடி உள்ளது. மேற்படி 4428 சதுர அடி மொத்தமும் ஒரே மனையா என்றால் சரியல்ல. 4428 சதுர அடி மனையை பிரித்ததற்கான எந்த அத்தும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் A முதல் F வரையுள்ள பகுதி தாய் சுவருடன் கூடிய காம்பவுண்ட் சுவர் இல்லை. அது மொத்தமும் தாய் சுவர் தான். தாய் சுவருக்கு தென்புறம் முழுவதும் வாதிக்கு சொந்தமான சொத்து உண்டு என்று தான் வாதியின் கட்சி என்றால் அது தவறு. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் தாக்கல் செய்தேன். பி.வா.சா.ஆ.8 ஆவணம் ஷேக் ஜலாலுதீன் என்பவரால் கிரையம் வாங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 8 ன் சொத்து விவரத்தின் நான்கெல்லை சர்வே எண் 316/1 முகமது இப்ராகிம் ஹாசியா வகையறாவிடமிருந்து M.இக்ராம் அவர்கள் வகையறா கிரையம் வாங்கியிருக்கும் வீட்டிற்கும், மேற்படி வீட்டின் கீழ்புற கொல்லைக்கும் , மு.கி.அகமது மனைக்கும் தெற்கு, நாளது தேதியில் கே. சாமிநாத சர்மா அவர்கள் இடத்திற்கும் கிழக்கு, ஆப்பக்கார தெரு போகும் ரோட்டிற்கு வடக்கு,

ந.மு.கல்யாண சுந்தரம் ,அ.செ.சு. அபுசாலி, சுந்தரம் பிள்ளை வகையறா வீட்டு கொல்லைக்கும் , இடத்திற்கும் மேற்கு. இதற்குட்பட்ட கிழமேல் வடபுறம் ஜாதியடி 212 இந்த அடி பொருந்திய மனைக்கட்டு இடத்தில் பொதுவில் 3 ல் 2 பங்கிற்கு உரிய நிலத்தை இதன் மூலமாக கிரையமாக செய்து கொடுத்துவிட்டேன். பி.வா.சா.ஆ.8 ல் கண்ட சொத்திற்கும் மேல்புறம் 1/3 பங்கு சாமிநாத சர்மா கிரையம் வாங்கியுள்ளார். மேற்படி பி.வா.சா.ஆ.8 ல் சொத்து விவரத்தில் கட்டிடத்திற்கும், கீழ்புற கொல்லைக்கும் தெற்கு என்று தான் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றும், அதனால் கொல்லைக்கும் தென்புறம் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ராமாராவ் , சாமிநாத சர்மா ஆகியோர்களுக்கு வழக்கு சொத்து எப்படி சொந்தம் என்று தெரியுமா என்றால் தெரியும். ராமாராவ் , சாமிநாத சர்மா ஆகியோர்களுக்கு பரம்பரை சொத்து அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது மாமனார் கஜிமுனிசா என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். கஜிமுனிசா என்பவர் கிரையம் வாங்கிய பத்திரம் தான் வா.சா.ஆ 2 ஆகும். மேற்படி வா.சா.ஆ.2 ல் சொத்து விவரத்தில் தென்புற நான்கெல்லையில் முகமது அபுல்கசன் என்பவர் பெயரில் தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எப்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1955 ல் புல எண் 317/6-க்கு தென்புறம் உரிமையாளர் முகமது அபுல்கசன் பெயர் வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முகமது அபுல்கசன் 1940 ம் ஆண்டிலேயே ராமசாமி பிள்ளை மகன் சுப்பிரமணிய பிள்ளை , ராமாராவ் ஆகியோர்களிடமிருந்து வாய்மொழியாக கிரையம் வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால் தான் புல எண் 317/6 ல் பரிமாற்றம் ஆவணம் செய்து கொண்டபோது தென்புறம் நான்கெல்லையில் முகமது அபுல்கசன் பெயர் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராமசாமி பிள்ளை மகன் சுப்பிரமணிய பிள்ளை என்பவரால் புல எண் 316/1 ல் கண்ட விஸ்திரணம் முழுவதும் தனக்கு சொந்தம் என்று மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 64/1949 என்ற வழக்கை 1.கோபால்ராவ் மகன் ராமாராவ், 2. முகமது அபுல்கசன் ,3.சாமிநாத சர்மா ஆகியோர்கள் பெயரில் உரிமை விளம்புகை பரிகாரத்திற்கு தொடர்ந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் ஒரு காம்பரமைஸ் டிகிரி ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த காம்பரமைஸ் தீர்ப்பின் படி ராமாராவ்-க்கு கீழ்புறம் 2/3 பங்கும், மேல்புறம் 1/3 பங்கு சாமிநாத சர்மா

அடைய வேண்டும் என்று தீர்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்64/1949 வழக்கில் கண்ட 2ம் பிரதிவாதியான முகமது அபுல்கசன் , மற்ற இரு பிரதிவாதிகளும், அவர்களுக்கு காம்பரமைஸ் டிகிரி மூலமாக கிடைத்த சொத்துகளை தன் மகன் ஷேக் ஜலாலுதீன் பெயரில் முகமது அபுல்கசன் அவர்களால் பி.வா.சா.ஆ 8 ன் படி கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து புல எண் 316/1 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். புல எண் 317/6 ல் உள்ள சொத்தை நான் அளந்து நிர்ணயம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சொந்தமான எந்த ஒரு விஸ்திரணமும் , வாதியால் அனுபவித்து வரும் சுவற்றிற்குள் மேல்புறம், கீழ்புறம்,வடபுறம் கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து என்பது புல எண் 317/6 ல் அடங்கவில்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு செப்டிக் டேங்க் எங்கு உள்ளது என்றால் வீட்டின் கீழ்புறமும், வழக்கு சொத்திலும் உள்ளது. ஒரு செப்டிக் டேங்கை புதிதாக கட்டவோ, அல்லது பழுது பார்க்கவோ பேரூராட்சியிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் செப்டிக் டேங்கை புதிதாக கட்ட அல்லது பழுது பார்க்க பேரூராட்சியிடம் அனுமதி பெறவில்லை. நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் மேல்புறத்தில் கேட் என்று போடப்பட்டுள்ள இடம் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு சொந்தமானது. ஏற்கெனவே புல எண் 317/6 ல் கிரையம் வாங்கிய விஸ்திரணத்தை விட குறைவாக உள்ளது என சொல்லி எனது வீட்டின் கீழ்புற உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எனது வீட்டின் கீழ்புற உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்து, பின்னர் வாபஸ் பெற்றுவிட்டதாக சொன்னால் சரியல்ல. எனது வீட்டின் தென்புற சுவரையும், அந்த தென்புற சுவற்றிற்கு கீழ்புறமும், மேல்புறமும் சுமார் 75 வருடங்களுக்கு மேற்பட்ட காம்பவுண்டு சுவர் தற்பொழுது இருந்து வருகிறதா என்றால் இருந்து வருகிறது. அது எங்களுக்கு சொந்தமானது. வீட்டின் தாய் சுவற்றை தவிர கீழ்புறமும், மேல்புறமும் உள்ள காம்பவுண்டு சுவற்றிற்கு உட்பட்ட இடம் தான் வாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. கேட் போடப்பட்டுள்ள இடமானது வாதிக்கு சொந்தமானது என்றும், அதை அபகரிக்க வேண்டும் என்று, தனக்கு சொந்தமானது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு தென்புற அத்தாக கிழமேல் கம்பிவலை வேலி இருந்ததாக ஆணையர் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அதில் பாதை இருந்ததா என்றால் திறப்பாக இருந்தது. தற்பொழுது வேலி போடப்பட்டுள்ளது. புல

எண் 316/1 ல் நான் உரிமைகோரும் 2.7 செண்டு இடத்திற்கு தென்புறத்தில் எவ்வளவு செண்டு உள்ளது என்றால் 29 செண்டு உள்ளது. கம்பிவலை வேலிக்கு வடபுறமும், எனது வீட்டின் தென்புற உள்ள தாய் சுவற்றிற்கும் இடையில் எவ்வளவு செண்டு உள்ளது என்றால் 7.5 செண்டு உள்ளது. பட்டா மூலம் தெரிந்து கொண்டேன். நான் உரிமை கோரும் விஸ்திரணம் போக மீதம் எவ்வளவு செண்டு உள்ளது என்றால் 7.5 செண்டு உள்ளது. மேற்படி 7.5 செண்டிற்கு மேல்புறம் உள்ள மன்னப்பன்குளம் போகும் ரோடு தான் பாதையா என்றால் இல்லை. அதனால் 7.5 செண்டிற்கு தென்புறத்தில் பாதை இல்லை. அடைத்து வைத்துள்ளார்கள். 30.08.2019 ல் இரண்டாவது முறையாக தாவா சொத்தை பார்வையிட்ட நீதிமன்ற ஆணையரை சாட்சியாக விசாரிக்கப்பட்டாரா என்றால் இல்லை. 30.08.2019 ல் நீதிமன்ற ஆணையரை விசாரித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அவரது சாட்சியத்தில் முதல் நிலை அறிக்கையில் அதில் A,B என்பது காம்பவுண்டு சுவர். தற்பொழுது நான் பார்த்தபோது அதில் இடித்துவிட்டு இரும்புக்கதவு வைத்திருந்தது தெரியவந்தது. மேலும், அந்த புல எண் சம்பந்தமான உட்பிரிவுகளை அளக்க முடியாது சூழ்நிலை உள்ளது. அதில் நிறைய கட்டுமானங்கள் உள்ளன. நான் ஏற்கெனவே IA 20/2018 என்ற மனுவில் தாக்கல் செய்திருந்த அறிக்கையுடன் இணைந்த வரைபடத்தில் I,H என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதி வழியாகவும் வாதியின் சொத்திற்கு வழி உள்ளது. தற்பொழுது அதில் இரும்புக்கம்பி வேலி போட்டுள்ளனர் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீ.ம.சா.ஆ.3 ல் புல எண் 316/1 ஏ என்பதை குறுக்காக அளவீடு செய்தபோது வாதிக்கு சொந்தமான பழைய கொட்டகைக்கு குறுக்காக அத்து சென்றது. அது என்னுடைய இடைநிலை அறிக்கையில் எண் 5 ஆக காட்டப்பட்டுள்ளது. அது கட்டப்பட்டு சுமார் 15 ஆண்டுகள் இருக்கும். வாதியால் முக்கோண வடிவத்தில் அனுபவம் செய்யப்பட்டு வந்த நிலையில் தற்பொழுது செப்டிக் டேங் கட்டி, எதிர்வாதியின் வீட்டில் இருந்து செப்டிக் டேங்கிற்கு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என ஆணையர் அவரது அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் அது சரியல்ல. வழக்கு சொத்திற்கு திடமான அத்துகள் தென்புறத்தை தவிர பிற பகுதிகளில் 75 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாதியின் முன்பாத்தியஸ்தருக்கு பாத்தியப்பட்டு, அதன்பின் வாதிக்கு பாத்தியம் ஏற்பட்டு நிராட்சேபனையாக வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும்,

நான் திடீரென்று 02.01.2018 ல் வழக்கு சொத்திற்குள் செப்டிக் டேங் தோண்ட எத்தனித்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புல எண் 316/1 ல் எனக்கு எந்த உரிமையும் கிடையாது. எனது வீட்டின் தாய் சுவற்றிற்கு தென்புறத்திலும், வாதிக்கு சொந்தமான கீழ்புற காம்பவுண்டு சுவற்றிற்கு மேல்புறத்திலும், மேல்புற காம்பவுண்டு சுவற்றிற்கு கீழ்புறத்திலும் புல எண் 317/6 கிடையாது என்றால் சரியல்ல. நான் எனக்கு சொந்தமான சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல், வாதிக்கு சொந்தமான சொத்தில் அத்து மீறி பிரவேசித்து செப்டிக் டேங் கட்ட முயற்சித்தது சட்டப்படி தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு அதிக செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.